பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

26 03 2025 WEDNESDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- கூட்டுறவுத்துறையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
- உணவு கலப்படம் தொடர்பான புகார்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- நாடு முழுவதும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சியினை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.
- ஊரகப்பகுதிகளில் 500 முழுநேர நியாயவிலைக்கடைகள் 61 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஐ பெரியசாமி தெரிவித்துள்ளார்.
- ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nitesh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

கூட்டுறவுத்துறையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதை தெரிவித்த அவர், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து பட்டியலிட்டார்.

கூட்டுறவு சங்கங்கள் இல்லாத பகுதிகளில் அவை ஏற்படுத்தப்படும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உணவு கலப்படம் தொடர்பான புகார்கள் மீது மத்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உணவு அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், புகார்கள் பெறப்பட்டவுடன் உரிய விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

இதற்காக நாடு முழுவதும் 242 ஆய்வகங்கள் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

உணவு கலப்படம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கென தேசிய அளவில் நுகர்வோர் தொலைபேசி சேவை ஒன்றும் செயல்பாட்டில் உள்ளதாக திரு பிரல்ஹாத் ஜோஷி சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சியினை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

இன்று புதுதில்லியில் முதலாவது பயிற்சி முகாமை தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் தொடங்கிவைத்தார்.

அடுத்த சில ஆண்டுகளுக்குள் ஒரு லட்சம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு இந்த பயிற்சி வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம், பத்து வாக்குச்சாவடிகளுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு இந்த பயிற்சி வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

18 வயது பூர்த்தி செய்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் வாக்குச்சாவடி நிலை அலுலவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு கியானேஷ்குமார் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள ஊரகப்பகுதிகளில் 500 முழுநேர நியாயவிலைக்கடைகள் 61 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஐ பெரியசாமி கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

புவி வெப்பமயமாதலை தடுக்கவும், ஊரகப்பகுதிகளில் பசுமையை அதிகரிக்கவும் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊரகப்பகுதிகளில் உள்ள 500 அரசு பள்ளிகளில் 50 கோடி ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் அமைச்சர் வெளியிட்டார்.

<<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கூட்டணி குறித்து உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

புதுதில்லியிலிருந்து சென்னை திரும்பிய அவர், விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

கூட்டணி இறுதி செய்யப்பட்டால் அதுதொடர்பான தகவல்கள் பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வுடன் தமிழகத்தின் வளர்ச்சி குறித்து ஆலோசனை நடத்தியதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

விளம்பர அரசியலை தவிர்த்து, திமுக அரசு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் எட்டாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்ய திட்டமிட்டிருந்த இரண்டு வெளிநாட்டு நிறுவனங்கள், ஆந்திர மாநிலத்தில் முதலீடு செய்ய முடிவு செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தொழில்புரிவதற்கு சாதகமான சூழ்நிலை இல்லை என்று கூறி, இந்த முடிவினை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தொழில் முதலீடுகள் குறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் திரு ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

மலையிட பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரைமுறைப்படுத்துவதற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நவம்பர் மாதம் இறுதிவரை நீட்டிக்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க ஆர்வம் உள்ளவர்கள் அதற்கான இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மலையிட பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைகளை வரைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட இந்த வாய்ப்பினை பொதுமக்கள் தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2016-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம்தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விற்கப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு மட்டுமே இது பொருந்தும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், கோடை வெயிலின் தாக்கம் வரும் வெள்ளிக்கிழமை முதல் படிப்படியாக அதிகரிக்கக்கூடும் என்றார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 39 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், "கோடை காலத்தில் ஏற்படும் உடல்நல பாதிப்புகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து பொதுநல மருத்துவர் டாக்டர் Spoorthy Arun-னுடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டம் மருங்கூரில் இலவச வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து ஆட்சியர் திருமதி அழகுமீனா அப்பகுதி மக்களுடன் இன்று கலந்துரையாடினார்.

------------------

வேலூர் நகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக காவல்துறை கண்காணிப்பாளர் திரு மதிவாணன் கூறியுள்ளார்.

------------------

கரூர் மாவட்டம் தாந்தோன்றிமலை அரசு கலைக்கல்லூரியில் வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த வேலைவாய்ப்பு முகாம் திருக்காங்குழியூரில் உள்ள ஜெயராம் வித்யாபவன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் என்று ஆட்சியர் திரு தங்கவேல் கூறியுள்ளார்.

-------

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் அமைந்துள்ள நூற்றாண்டு பழமையான பாரதியார் பிறந்த இல்லம் அதன் பழமை மாறாமல் மறுசீரமைக்கப்படும் என்று ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

---------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் காவல்துறை சார்பில் மக்கள் குறைதீர் கூட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் திரு ரஜத் சதுர்வேதி தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

அரியலூர் மாவட்டத்தில் செல்லப் பிராணிகளுக்கான கண்காட்சி மற்றும் மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nitesh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 97 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் Ilyas Guchigov –வை வென்றார்.

---------------

உலகக்கோப்பை Sepak Takraw சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பீகாரில் நடைபெற்ற இப்போட்டியில், பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில், ஆடவர் Regu அணி தங்கப்பதக்கம் வென்றது வரலாற்று சாதனையாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வெல்வது இதுவே முதல் முறை என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

---------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Akanksha Nitture இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 7-5 என்ற செட் கணக்கில், ஹாலந்தின் Eveling Koning –ஐ வென்றார்.

<<<<<<END>>>>>>